கருவூலக் கணக்கு ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

தமிழ்நாடு,சென்னை-35.

*****

முன்னிலை: திரு.க.விஜயேந்திரபாண்டியன்,இ.ஆ.ப.

ந.க.எண்.38945/சி1/2021 நாள்: 08.02.2023.

பொருள்: பணியமைப்பு-கருவூலக் கணக்குத் துறை - திரு.M.இளம்பரிதி இளநிலை உதவியாளர், திருப்பூர் மாவட்ட கருவூல அலகு - கருணை அடிப்படையில் பணிநியமனம் - பணிவரன்முறை ஆணைகள்

பார்வை:

1. கருவூல அலுவலர், திருப்பூர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.331/2019/அ1,நாள்.22.01.2021
2. கருவூல அலுவலர், திருப்பூர் அவர்களின் செயல்முறை ஆணைஎண்.331/2019/அ1,நாள்.05.10.2021 மற்றும் 18.10.2021
3. கருவூலக்கணக்கு ஆணையரக கடித ந.க. எண்.38945/சி1/2021 நாள்.02.12.2021
4. அரசாணை(3ப) எண்.12, நிதி (க.க.-2) த்துறை நாள்.27.08.2022

*******

திருப்பூர் மாவட்டக் கருவூல அலகில் உதவி கருவூல அலுவலராகப் பணியாற்றிய திருV.முருகானந்தம் அவர்கள் 07.02.2018 அன்று பணியிலிருக்கும்போது மரணமடைந்ததைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரரும் மகனுமாகிய திருM.இளம்பரிதி அவர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு பார்வை-1ல் காணும் செயல்முறை ஆணைப்படி 27.01.2021 முற்பகல் முதல் திருப்பூர் மாவட்ட கருவூல அலகில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை-4-இல் காணும் அரசாணையில் தனியரது பணிவரன்முறை ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதில் பார்வை-1-இல் காணும் செயல்முறை ஆணைப்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திருM.இளம்பரிதி (காலஞ்சென்ற திரு.V.முருகானந்தம், உதவி கருவூல அலுவலர், சார்நிலைக்கருவூலம், மடத்துக்குளம் என்பவரின் மகன்) கருணை அடிப்படையில், தற்காலிகமாக இளநிலை உதவியாளராக 27.01.2021 முற்பகல் முதல் தற்காலிகமாக பணிபுரிந்து வரும் திருM.இளம்பரிதி இளநிலை உதவியாளரின் தற்காலிக பணிநியமனம் இளநிலை உதவியாளர் பதவியில் திருப்தி அளிக்கும் படியாக உள்ளதாலும், அப்பதவிக்குரிய மற்றும் கருணை அடிப்படையிலான நியமனத்திற்குரிய அனைத்து தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும்

திருமதி இளம்பரிதி, இளநிலை உதவியாளரின் பணியினை தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் பணி நிபந்தனைகள் சட்டம் 2016-ல் பிரிவு 25-இன் உட்பிரிவு (1)-ன் படி தனியர் பணியேற்ற நாளான 27.01.2021 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை வரன்முறைப்படுத்தி செய்யப்படுவதன் மூலம் ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத்தொகை ஏதுமிருப்பின் தனியர் அதனை பெற தகுதியுடையவராகிறார்.

பார்வை-4-இல் காணும் அரசாணையில் தனியருக்கு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டதை தொடர்ந்து தமிழ்நாடு கருவூலக்கணக்குத்துறை பணிவிதிகளின்படி பணிவரன்முறை நாளான 27.01.2021 முதல் தகுதிகாண்பருவம் துவங்கி ஆணையிடப்படுகிறது. மேலும் தகுதிகாண்பருவம் துவங்கப்பட்டு மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினராக கருதப்படுவார். மேலும் தகுதிகாண் பருவம் காலத்திற்குள் தேர்ச்சி பெற வேண்டிய தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் ஏதேனும் இருப்பின் அதனை நிறைவு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

க.விஜயேந்திர பாண்டியன்
கருவூலக் கணக்கு ஆணையர்

பெறுநர்

1. திருமதி இளம்பரிதி,
   இளநிலை உதவியாளர்,
   மாவட்டக்கருவூலம் திருப்பூர்
   திருப்பூர் மாவட்டக்கருவூல அலகு
   (உரிய வழிமுறையாக)

2. கருவூல அலுவலர்,
   மாவட்டக் கருவூலம்,
   திருப்பூர்.

4. இருப்புக்கோப்பு

TREASURY OFFICER
TIRUPPUR.

//ஆணைப்படி அனுப்பலாகிறது//